# சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக் கைதிகள் நலன்புரி நிதியம் - 2010

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 அபிப்பிராயம்

எனது பரிசோதனைகளிலிருந்து தென்படுவதும் நான் பெற்றுக் கொண்ட தகவல்களுக்கும் மற்றும் எனக்கு அளிக்கப்பட்ட விளக்கங்களுக்கும் அமைய, சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக்கைதிகள் நலன்புரி நிதியத்தின 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறு உரிய பதிவேடுகள் முறையாகப் பேணப்பட்டிருந்தன எனவும், இந்த அறிக்கையின் 1.2 ஆம் பந்தியில் குறிப்பிடப்பட்ட விடயங்களால் நிதிக்கூற்றுக்களில் விளையும் தாக்கத்தைத் தவிர சிறைச்சாலைகள் திணைக்களத்தின் சிறைக் கைதிகள் நலன்புரி நிதியத்தின் 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான செயற்பாட்டு விளைவுகளையும் உண்மையாகவும் நேர்மையாகவும் காட்டும் வண்ணம் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்ட கணக்கீட்டுக் கோட்பாடுகளுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன என நான் அபிப்பிராயப்படுகின்றேன்.

### 1.2 நிதிக்கூற்றுக்கள் மீதான கருத்துரைகள்

#### 1.2.1 கணக்கீட்டுக் குறைபாடுகள்

மீளாய்வாண்டின் போது ஒரு சிறைச்சாலைக்கு அன்பளிப்பாக 195 நூலகப் புத்தகங்கள் பெறப்பட்டிருந்ததுடன் அவை பெறுமதியிடப்பட்டு நிலையான சொத்துப் பதிவேட்டில் உள்ளடக்கப்பட்டிராததுடன் அவற்றின் பெறுமதி கணக்கிற்கு எடுக்கப்பட்டிருக்கவில்லை.

#### 1.2.2 இணக்கம் செய்யப்பட்டிராத கட்டுப்பாட்டுக் கணக்குகள்

பின்வரும் அவதானிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.

(அ) செயற்படுத்தப்பட்ட நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாக செயற்பாட்டு அறிக்கையில் குறிப்பிடப்பட்ட செலவினங்களுக்கும் நிதிக்கூற்றுக்களில் காண்பிக்கப்பட்டுள்ள செலவினங்களுக்குமிடையே வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன. விபரங்கள் பின்வருமாறாகும்.

(ஆ) இலவசமாக அன்பளிப்பு சொத்துக்கள் தொடர்பான பட்டியல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) ஆண்டின் போது கொள்வனவுகள் மற்றும் அன்பளிப்புப் பெறுவனவுகள் வெளிப்படும் வகையில் நிலையான சொத்துக்கள் தொடர்பான பட்டியல் நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை.

### 1.2.4 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் முதலியவற்றுடன் இணங்காமை

1973 இன் 18 ஆம் இலக்க சிறைச்சாலைத் திணைக்கள சிறைக்கைதிகள் நலன்புரி நிதிய அதிகாரச்சட்டத்தின் 4 ஆம் பிரிவின் எச்(i) மற்றும் எச்(iii) ஆம் துணைப்பிரிவின் பிரகாரம் விற்பனை அறையில் இருந்தும் சிற்றுண்டிச் சாலையில் இருந்தும் பெறப்படும் தேறிய இலாபம் நிதியத்திற்கு செலவு வைக்கப்பட வேண்டிய போதிலும் இதற்காக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மற்றும் செயற்பாட்டு மீளாய்வு

### 2.1 நிதிசார் மீளாய்வு

### 2.1.1 நிதிசார் விளைவுகள்

மீளாய்வாண்டிற்காக நிதியத்தின் நிதிசார் விளைவுகள் ரூபா 958,030 தொகையான பற்றாக்குறையானதுடன் இதனோடொத்த முன்னைய ஆண்டிற்கான பற்றாக்குறை ரூபா 491,264 ஆனமையால் நிதிசார் விளைவுகளின் ரூபா 466,766 தொகையான அதிகரிப்பைக் காணக்கூடியதாக இருந்தது. வருமானம் ரூபா 54,953 ஆலும் கல்வி மற்றும் சமயச் செலவினங்கள், கல்வி மற்றும் நலன்புரிச் செலவினங்கள், விளையாட்டு மற்றும் ஏனைய வசதிகள், பரிசுத் தொகைச் செலவினமும் நிலையான சொத்துப் பெறுமானத்தேய்வு முறையெ ரூபா 18,075 ஆலும் ரூபா 155,296 ஆலும் ரூபா 57,576 ஆலும் ரூபா 119,565 ஆலும் ரூபா 186,117 ஆலும் அதிகரித்ததுடன் பின்தொடர் சேவை நடவடிக்கைகள் ரூபா 14,910 ஆல் குறைவடைந்தமை மேற்குறித்த நிதிவிளைவுகளில் அதிகரிப்புக்கு காரணமாகியிருந்தது.

எண்ணிக்கைகளுக்கும் இடையே பின்வரும் வேறுபாடுகள் அவதானிக்கப்பட்டன.

| நிகழ்ச்சித்திட்டங்கள் | செயற்படுத்தப்படுவதற்காகத் திட்டமிடப்பட்டிருந்த நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கைகள் | செயற்படுத்தப்பட்டுள்ள நிகழ்ச்சித்திட்டங்களின் எண்ணிக்கைகள் | வேறுபாடு |
|---|---|---|---|
| ஆன்மீக ரீதியான மற்றும் சமய நடவடிக்கைகள் | 2319 | 2159 | 160 |
| ஆன்மீக ரீதியான மற்றும் நலன்புரி நடவடிக்கைகள் | 3058 | 2454 | 604 |
| பரிசு வழங்கல் | 240 | 81 | 159 |
| பின்தொடர் சேவை நடவடிக்கைகள் | 145 | 70 | 75 |
| | 5,762 | 4,764 | 998 |

(இ) சிறைக்கைதிகளின் பின்தொடர் சேவை நடவடிக்கைகள் மற்றும் மீளச் செலுத்தப்பட வேண்டிய முற்பணங்கள் போன்ற நிகழ்ச்சித்திட்டச் செயற்பாடுகள் மிகவும் நலிவான நிலையில் இருந்தமை அவதானிக்கப்பட்டது. விபரம் பின்வருமாறாகும்.

| நிகழ்ச்சித்திட்டம் | 2010 ஆம் ஆண்டிற்கான ஏற்பாட்டுத் தொகை | 2010 திசெம்பர் 31 இல் உள்ளவாறான செலவினம் | ஏற்பாட்டின் சதவீதமாக செலவினம் |
|---|---|---|---|
| | ரூபா | ரூபா | % |
| சிறைக்கைதிகளின் பின்தொடர் சேவை நடவடிக்கைகள் | 322,250 | 15,000 | 4.6 |
| மீளச் செலுத்தப்பட வேண்டிய முற்பணம் | 680,000 | 00 | 0 |

### 2.2.2 உள்ளகக் கணக்காய்வு

சிறைக்கைதிகளின் நலன்புரிக்கான நிதியத்தின் செயற்பாடுகளுக்கு உரிய உள்ளகக் கணக்காய்வு நிகழ்ச்சித்திட்டங்கள் திட்டமிடப்பட்டு